Shanthi Shanthi (Ayyappa) (Tamil)

Ayyappa · Tamil

(தர்பாரி கானடா)

சாந்தி சாந்தி சாந்தி சாந்தி சபரி வாசனே
சாந்தம் உன் ச்வரூபம் அன்றோ பத்ரு நாசனே (சாந்தி)

கான மழையில் நனைந்த பிறகும் குளிரவில்லையா
ஞான் ஜோதி ஜ்வாலையாக ஒளிரும் ஐயப்பா -
நீ ஒளிரும் ஐயப்பா (சாந்தி)

ஐந்து புலன்கள் ஐந்து மலைகள் ஆளவந்திடு
ஐங்கரன் சகோதரா நீ அமைதி தந்திடு -
மன சாந்தி தந்திடு (சாந்தி)

சிந்தை எங்கும் ஜீவகீதம் நீ இசைத்திடு
சித்விலாச தீபமே நீ அமைதி தந்திடு
தந்தை தாயும் ஆனவா நீ தயை புரிந்திடு
சந்ததம் உன் சரண கோஷம் -
மன சாந்தி தந்திடு (சாந்தி)